Registered as a News Paper in Ceylon P. M. G. No: H. A. 9/300] of 1953.

விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஞு சித்திரைமீ கடஉ வெள்ளிக்கிழமை (26 April. 1963) [இல-ச

## மாயாவாத தும்சகோளரி நா. கதிரைவேற்பிள்ளை ஞாபகம்

[பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை]

முற்றொடர் — 5.

### மாயாவாதம்

'சான்றவர் ஆய்ந்திடத்'
தக்கவாம் பொருள்
மூன்றுள; மறையெலாம்
மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி;
ஆருயிர்த் தொகை
வான்றிகழ் தளையென
வகுப்ப ரன்னவே'

என்றிங்ஙனம் முப்பொருளுண்மையைத் தமபுகல்வர்களாகிய சூரபன் மனுதியோர்க்குக் காசிப முனிவர் உபதேசிப்பாராயினர்.

'நன்னயமாயவள் நகைத்துக் கூறுவாள்'. கணவராகிய காசிபரின் உபதேசத்தை மனைவியாகிய மாயை கேட்டுக்கொண்டு நின்றவள் சிரித்துவிட்டாள்: அடக்க முடியாமற் சிரித்துவிட்டாள்.

'மறைதேரி முனிவநீ
வாய்மை யாகிய
உறுதியை மொழிந்தனை;
உயர்ந்த வீடுறும்
அறிவுடை முனிவரர்க்
கன்றி நாமருள்
சிறுவருக் கித்திறஞ்
செப்ப லாகுமோ ?

"வேதாந்தத் தெளிவும் சுத்தாத்துவிதமும் ஆகிய சைவ சித்தாந்தத்தையோ, இக்குழந்தைகள் முன்னிலையில் கவிழ்த்துக் கொட்டுகிறீர்கள், சருகு பட்சணிகளாகிய முனிக் குழந்தைகளுக்குப் போய்ச் சொல்லுங்கள். இந்த உபதேசத்தை யாருக்கு எது சொல்லுவதென்பது தெரியவேண்டாமா?" என்றாள் சகதர்மிணி. காசிபர் உபதேசத்தை நிறுத்தினர். மாயை தன் குழந்தைகளை அழைத்துக்கொண்டு, தங் குலகுருவாகிய சுக்கிராச்சாரியரிடஞ் சென்றாள் வம்மின்! வம்மின் என்று சுக்கிரபகவான் குழந்தைகளை வரவேற்று இருத்தினர். உபதேசம் தொடங்கியது.

"பாசமென்றும் பசுவென்றும்
மேதகும்
ஈசனென்றும் இசைப்பர்
தனை யெனப்
பேசல் மித்தை; பிறிதில்லை'

இது பரபக்க நிராகரணம் இதனுல் காசிபரோதிய முப்பொருள் உபதேசம் பற்றறக் களையப்பட்டது. அப்பால் சுவபக்க உபதேசம் வருகின்றது.

'ஆவியுந் தேகமேவு சிவனும் ஒன்றாகும்' ஆகையால்

'உற்றதோர் மேன்மை நாடி
உன்னைநீ பிரமம் என்றே
தேற்றெனத் தேளிதி'

மூவர் மாணவர்களுள்ளும் உத்தம பரிபக்குவ மாணவன் சூரபன்மன் அவனுக்குச் சுக்கிரபகவானுபதேசித்த சுவபக்க உபதேசம் இது. ஆன்மா பரமான்மாஎன இரண்டில்லை. பொருள் ஒன்றே.

இனி,

இதன் விளக்கம் பின் வருமாறு:-

"ஆதியந்த மின்றாகிய
மலமாஞ்
சோதியாயமர் தொல்சிவன்
ஆடலின்
காதலாகிக் கருதுதன்
மாயையாற்
பூதம் யாவும்
புறவும் புரிவனுல்.

"இடங்கோள் மாயையின்
யாக்கைக ளாயின
அடங்கவும் நல்கி
யன்னவற் றாடுதான்
கடங்கோள் வானிற்
கலந்து மற்றவ்வுடல்
மடங்கு மெல்லையின்
மன்னுவன் றேன்மை
போல்".

ஒன்றாகிய பரம்பொருள் சும்மா கிடக்கமாட்டாமையால்; விளையாட்டாக, அநிர்வசநீயம் என்று சொல்லப்படும் மாயையுட் புகுந்து விளையாடி, கடமுடைந்தது போல் மாயையாகியஉடம்பு உடையப் பழைய நிலையை எய்தும்; கடாகாயம் மகாகாயம் ஆவதுபோல.

'இத்திறத்தி னெஞ்ஞான்று
மவ்வெல்லைதீர்
நித்தனுடல் நிலைமை
புரிகுதிமே;
பித்தையாகும் வினைகளும்
யாவையும்;
முத்திதானும் முயல்வது
மன்னதே'

'பொய்யதாகும் பொறிபுலம்
எனற்டின
மெய்யதோ அனை

## நற் சிந்தனை

—:—

அன்பு சிவமென்ற
ஆன்றோர் திருவாக்கை
இன்பமுடன் போற்றி
இருப்பதுவு மெக்காலம்

## கோணேசராலயம்

—o—

15-8-50ல் நடைபெற்ற மகாசபைக்கூட்டத்தின் பிரகாரம் கோணேசர் கோவில் நிருவாகத்தினர் தெரிவு இம் மாதம் 28 ந்திகதி 28-4-1963 பிற்பகல் 4மணிக்கு கோணேசராலய முன்றலில், முகாந்திரம் த பாலசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

கோயில் கணக்குகள் சமர்ப்பித்தல், கோயில் சட்டதிட்டங்கள் பொதுமக்களின் ஆலோசனைக்குச் சமர்ப்பித்தல், நிருவாகத்தினர் தெரிவு ஆகியவை கூட்டத்தில் இடம் பெறும். ——

### ஆலய பரிபாலன சபையின் பொதுக்கூட்டம்

எதிர்வரும் 5-5-63 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணியளவில் கல்வளை விநாயகராலய பரிபாலனசபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் ஷெ ஆலயத்தின் முன்மண்டபத்தில் நடைபெறும்

—:—

காணும் விழுப்பொருள்;
மையில் புந்தியும்
வாக்கும் வடிவமுஞ்
செய்ய நின்ற
செயல்களும் அன்னவே.

தோன்றுகின்றதுந் துண்ணென
மாய்வதும்
என்று செய்வினை யாவதுஞ்
செய்வதும்
ஆன்ற தற்பரற்
கில்லை; அணையதை
ஊன்றி நாடின்
உடற்குறு பெற்றியே.

போவதும் வருகின்றதும்
பொற்புடன்
ஆவதும் பின் அழிவதுஞ்
செய்வினை
ஏவதும் எண்ணிலாத
கடந்தொறு
மேவுகின்ற தோர்
விண்ணினுக் காகுமோ?

அன்ன போலெங்கும்
ஆவியோன் றாகியே
துன்னி நின்றிடு
தொல்பரன் வேறுபாடு
என்னதும் இலன்;
என்றுமோர் பெற்றியால்
மன்னுமங்கது வாய்மையென்
றோர்தி நீ.

இத்துணையும் சுவபக்க விளக்கம். இஃது ஏகான்ம

உ

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையோருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளம் குளிருமே.

x x x

ன்மைபெருத அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனுர் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக் ன்றோம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினுன் சிவபெருமான்.

திருவதிகை - மனவாசகங்கடந்தார்
அருளிச் செய்த

## உண்மை விளக்கம்

### மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

(முற்றொடர் - 15)

### இதுவுமது

(திருவாசி - ஓங்காரமும், பஞ்சாக்கர நடன தரிசனத்துக்கு அதிகாரிகளும், பயனும்)

ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்
நீங்கா வெழுத்தே நிறைசுடராம் — ஆங்காரம்
அற்று ரறிவரணி யம்பலத்தா னுடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின். (34)

கொ — கூ: ஓங்காரமே நல் திருவாசி; அதனில் உற்று நீங்கா எழுத்தே நிறை சுடராம்; (இவற்றை) ஆங்காரம் அற்றார் அறிவர்; அணி அம்பலத்தான் ஆடல் இது பெற்றார் பின் பிறப்பு அற்றார்.

ப — ரை: ஓங்காரமே நல் திருவாசி - ஓம் என்னும் பிரணவ மந்திரமே நல்ல திருவாசியாகும்; அதனில் உற்று நீங்கா எழுத்தே நிறை சுடராம் — அப்பிரணவத்தைப் பொருந்தி அதனை விட்டு நீங்காத பஞ்சாக்கரமே திருவாசியில் சுடராயமைந்து நிறைந்து நின்ற (உள்) ஒளியாகும். ஆங்காரம் அற்றார் அறிவர் - இவை இங்ஙனமாதலை யான் எனது என்னும் செருக்கறுத்த பக்குவான்மாக்கள் அறிவார்கள்; அணி அம்பலத்தான் ஆடல் இது பெற்றார் பின் பிறப்பு அற்றார் - அழகிய பொன்னம்பலமுடையான் செய்கின்ற திருநடனத்தைத் தரிசிக்கப்பெற்றவர்களே பின்பு பிறப்பு இல்லாதவராவர்.

இதனுல் சூக்கும பஞ்சாக்கர அமைப்பும், திருநடன தரிசனத்துக்கு அதிகாரியாவாரியல்பும், தரிசனப்பயனுங் கூறப்பட்டன. ஆங்காரம் ஆணவ மயக்கத்தான் உளதாகிய செருக்கு; அது தான் அல்லாத உடம்பை "யான்" என்றலும், தனதல்லாத — தன்னோடு சம்பந்தமில்லாத பொருளை 'எனது' என்றலுமாம். திருவாசியிலுள்ள சுடர்கள் ஐம்பத்தோரக்கரங்களென்ப. பிரணவத்துள் பஞ்சாக்கரம் உற்று நீங்காதிருக்கும் என்றமைக்கு "இறை சததி பாசம் எழின்மாயை ஆவி, உறநிற்கும் ஓங்காரத்துள் (திரு. அ பய அதி. 9. செய். 1) என்பது சான்றாதல் உணர்க.

பொழிப்பு: பிரணவமே திருவாசியாதலையும், பிரணவத்துள் அடக்கமான பஞ்சாக்கரமே திருவாசியில் நிறைந்த சுடராதலையும் ஆணவ முனைப்பகன்றார் அறிவர். (இங்ஙனம் உட்பொருள உணர்ந்து) இறைவனின திருநடனத்தைத் தரிசித்தவர்களே (இனிப்) பிறவியற்றோராவர்.

### இதுவுமது

(பஞ்ச கிருத்திய நடனம்)

தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தி லுற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு. 35.

கொ—கூ: (இறைவன்) துடி அதனில் தோற்றம் (ஆகவும்), அமைப்பில் தோயும் திதி (ஆகவும்), சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் (ஆகவும்), ஊறறம் ஆ(க) ஊன்றும் மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் (ஆகவும்), நான்ற மலர்ப்பதத்தே முத்தி (ஆகவும் திருநடனஞ் செய்வான் என்பதை நீ) நாடு,

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

தொழில்மகிமை நினைவுநாள் (மேதினம்) கொண்டாட்டத்தை முன்னிட்டு, எதிர்வரும் 1-5-63 புதன்கிழமை 'இந்துசாதனம்' அலுவலகத்திலும், சைவப் பிரகாச அச்சகத்திலும் வேலை நடைபெறாது. —அதிபர்.


THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சோபகிருது ஸு சித்திரை மீ கங உ வெள்ளிக்கிழமை


## ஒருவரும் சரியில்லை!

யாழ்ப்பாணமாநகர உள்ளூராட்சி முறை தாழ்ந்த நிலைமையிற் சீர்கெட்டிருப்பதைப்பற்றி நாம் ஆழ்ந்து சிந்தனை செய்து ஆவன புரிய வேண்டியவர்களாயிருக்கின்றோம். அடுத்தடுத்து ஐந்து நகர பிதாக்கள் தலைமைப்பீடத்தில் ஏறிக் கால எல்லைக்குள் இறங்க வேண்டியவர்களானர்கள். ஐந்தாவது நிகழ்ச்சி ஆச்சரியமானது. பதினைந்து அங்கத்தவர்கள் உள்ள சபையில் எழுவர் ஒரு குழு ஆகவும், வேறு எழுவர் இன்னொரு குழு ஆகவும் பிரிவு காட்ட எஞ்சிய ஒருவரின் தஞ்சத்திலே தலைமைத் தெரிவு தங்கியிருந்தது.

ஒருவருக்கும் உதவியளிக்க மனம் ஒருப்படாத அந்த ஒருவர் நடுவு நிலைமை வகித்ததின் பயனாகத் திருவுளச் சீட்டிட்டுத் தலைவர் தெரியப்பெற்றார். ஆனல் ஐந்து நாட்களிலே திருவுளம் மாறுபட்டுத் தலைமைப்பீடம் புதுத் தலைவரைத் தொடர்ந்து தாங்க முடியாது தடை விதிக்கப் பட்டிருக்கிறது.

அரசியல் வேடிக்கையா? அல்லது பொறுப்புணர்ச்சியின் பொழுதுபோக்கா? எது என்று நாம் அறிய முடியவில்லை யாழ்ப்பாண மாநகரின் உள்ளூர் ஆட்சி நிலைமையைப்பற்றி சென்ற தேர்தலின் பின் இந்த மாநகர சபையின் நிகழ்ச்சிகள் கட்சிகட்டினதும் தலைவரை விரும்பியெடுத்துப் பின் விலக்கி வைத்தமையும் ஆகும். இவ்வித அரசியல் நாடகத்துக்கு மன்றமாக மாநகரசபை நிறுவப்படவில்லையே. அவ்வாருயின் இந்த நாடக நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுவதை உள்ளூர் ஆட்சி அமைச்சர் ஆராய்ந்து, ஆவனசெய்யாதிருப்பதென்னே?

பலமுறையும் நாம் மாநகர சபைத் தலைவரை (பெரும் பிதா) எவ்வாறு தெரிவு செய்தல் வேண்டுமென்று எழுதியுள்ளோம். மாநகர சபை வாக்காளர்கள் அத்தனைபேரும் தலைவரைத் தெரிவுசெய்யும் முறையைச் சட்டத்திலே திருத்தமாக அமைத்தல் அவசியம். இந்த முறை எத்தனையோ நாடுகளில் நடைபெறுகின்றது. பதினைந்து அங்கத்தவர்களுக்கு மட்டுமன்று மாநகர மக்கள் யாவருக்கும் தலைவர் மறுமொழி சொல்ல வேண்டிய பொறுப்புள்ளவர் என்பதற்கு இவ்விதத் தெரிவு ஒழுங்கு உதவியாயிருக்கும். பதினைந்து நகர பிதாககளில் ஒருவருஞ் சரியில்லை என்ற புகழைப் பெற்ற மாநகரத்தை மேலும் அவமானப்படுத்தாமல் அங்கத்தவர்கள் அனைவரும் தங்கள் பதவிகளைத்துறந்து மீண்டும் ஒரு தெரிவை வேண்டுவது முதற்கண் செய்யப்பட வேண்டிய பொதுத்தொண்டாகும். விழுத்தும் வேலை வேண்டாம்; எழுப்பும் எண்ணம் எழவேண்டும்.

—:—

நேயர்கள் நெஞ்சம்

## சைவசமயத்திற்கு வேதநூல் எதுவோ?

"கிறீஸ்தவ சமயத்திற்கு பைபிளும், இஸ்லாமிய சமயத்திற்குக் குர்ஆனும் பௌத்த சமயத்திற்கு தர்மபாதமும் மத நூல்களாக அமைந்திருக்கின்றன. இப்படியே மற்ற எல்லாச் சமயங்கட்கும் நூல்களுண்டு, ஆனல் சைவ சமயத்திற்கு எந்த நூலை மேற்கொள்வதென்பது இன்னமும்தெளிவாகவில்லை"

இவ்வாறு கதிர்காம யாத்திரிகர் தொண்டர்சபைஆதரவில் கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகமூர்த்தி மண்டபத்தில் திருநாவுக்கரசு நாயனர் குருபூசை விழாவிற்குத் தலைமை வகித்த திரு இரா. சபாநாயகம் அவர்கள் நிகழ்த்திய தலைமையுரையில் கூறிய. செய்தி 23-4-63 ல் வெளிவந்த வீரகேசரிப் பிரசுரத்தில் காணப்படுகின்றது. சைவ சமயத்திற்கு முதல் நூல்கள் எவை யென்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வெளியிட்ட முதலாம் சைவ வினவிடையில் தெளிவாகக் காணப்படுகின்றது.

உலகத்துக்குக் கருத்தா யாவர்?

'சிவபெருமான்'.

சிவபெருமான் ஆன்மாக்களுக்காக அருளிச் செய்த முதனூல்கள் எவை?

'வேதம் சிவாகமம் என்னும் இரண்டுமாம்'.

இவ்வாறுநாவலர் பெருமான் கூறியிருப்பதை திரு. இரா. சபாநாயகம் அவர்களுக்குத் தெரிவிப்பது எமது கடமையாகும்.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்

சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம். 23-4-63.

முருகன் பஜனை

## உலகமெல்லாம் காப்பவனே!

"அளவையூர் - சஞ்சீவி"

பல்லவி

ஓம்முருகா ஓம்முருகா ஓம்முருகையா
உலகமெல்லாம் காப்பவனே ஓம் முருகையா

சரணங்கள்

செந்தமிழைத் தந்தவனே ஓம் முருகையா
சிவகுருவாய் வந்தவனே ஓம் முருகையா
சுந்தரிகள் பங்குடையாய் ஓம்முருகையா
சூரர்குல சங்காரா ஓம் முருகையா (ஓம்)

நினைவோரின் நெஞ்சினிலே ஓம் முருகையா
நீலமயில் மீதிருப்பாய் ஓம் முருகையா
வினைதீர்க்க வேல்பிடித்தாய் ஓம் முருகையா
வெற்றிதரச் சேவல்கொண்டாய் ஓம்முருகையா (ஓம்)

## காசிவாசி சிவஸ்ரீ. ஈசான சிவாசாரியர் மறைவு

மகாமகோபாத்தியாய சித்தாந்த சரபம் காசிவாசி ஈசானசிவாசாரிய சுவாமிகள் அண்மையில் சிவபதமடைந்துவிட்டாரென்ற துக்கமான செய்தியை 16-4 63 ல் வெளிவந்த சென்னை இந்துப் பத்திரிகை மூலம் அறிகின்றோம். சைவ உலகத்துக்கு அவர் ஆற்றிய தொண்டு அளவிடற்கரிதாகும். அவர் வடமொழியிலும் தமிழ்மொழியிலும் சிறந்த பாண்டித்தியம் உள்ளவர். வேதசிவாகமங்களையும் சைவ சித்தாந்த நூல்களையும் ஆழமாகக் கற்றுப் பழனி வேதாகம பாடசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றியவர். சைவசித்தாந்தத்தைப்பற்றிப் பலநூல்களும் கட்டுரைகளும் எழுதி வெளியிட்டவர். சொற்சோர்விலலாமல் இனிய தமிழ் நடையில் சைவ சித்தாந்தத்தைப்பற்றிக் கூட்டங்களில் ஆராய்ச்சி விரிவுரைகள் பல நிகழ்த்தியுள்ளார். சைவ சாத்திரங்களின் உட்பொருளைப்பற்றி பண்டிதர் மதன் மோஹன்மாளவியா அவர்களுடனும் மகாத்மா காந்தியுடனும் கலந்து உரையாடியுள்ளார்.

ஈழநாட்டுக்கும் பலதடவைகளில் விஜயஞ்செய்து சைவ சமய விரிவுரைகள் நிகழ்த்தி சைவ சமய அறிவை மக்களிடையே பரப்பியுள்ளார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரிடத்தில் அவருக்கு நிறைந்த அன்பும் மதிப்புமிருந்தது. சைவ பரிபாலனசபையாதரவில் அவர் நிகழ்த்திய முதல் விரிவுரையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்பெருமான் அவதாரஞ்செய்த பூமியில் கால்வைக்கத் தம் மனம அஞ்சுகின்றதெனக் குறிப்பிட்டார். நாவலருடைய பாலபாடங்களைப் பண்டிதர் மதன் மோஹன் மாளவியா அவர்களுக்கு ஆந்த மொழியில் மொழிபெயர்த்து விளக்கியபொழுது அவர் அந் நூல்கள் வேதசிவாகமத்தின் சாரத்தைக் கொண்டிருப்பதை அறிந்து பராட்டி வியப்படைந்தனரெனவும்கூறினர்.

சுவாமிகள் பாரதநாட்டில் [illegible] தலைமை வகித்துத் தொண்டுபுரிந்தவர். ஸ்ரீமத் கிருபானந்தவாரியார் ஈழநாட்டு டக்டர் த. நல்லைநாதன் உட்படப்பல சிஷ்டியார்களுக்குச் சமய விசேட நிர்வாண தீக்ஷைகள் புரிந்து மக்களுக்கு நன்னெறிகாட்டியவர். சைவபரிபாலனசபையாதரவிலும் சில வருடங்களுக்கு முன் பல அன்பர்களுக்குச் சமயதீட்சைபுரிந்தவர். அவர் இயற்றிய நூல்களையும் நிகழ்த்திய விரிவுரைகளையும் ஒன்ருகச் சேர்த்து ஒரு புத்தகமாக வெளியிடுதல் சைவமக்களின் இன்றியமையாத கடமையாகும். அவரையறியாத சைவமக்களும் எங்கள் நாட்டுப் பிற்சந்ததியாரும் அவருடைய தூய கருத்துக்களை நிலைக்கச்செய்யவும் அத்தகையதொண்டு பெருந்துணையாகும்.

சுவாமிகளுடைய பிரிவு சிறப்பாகச் சைவ உலகத்துக்கும் பொதுவாகப் பாரதநாட்டுக்கும் பெரிய நட்டமாகும். சைவாதீனங்கள் அவருடைய ஞாபகத்தைநிலைநாட்டஆவன செய்தல் விரும்பத்தக்கது.

——

### அணிந்துரை அரங்கம்

**தென்னவன் பிரமராயன்**

ஆசிரியர்: தேவன்
யாழ்ப்பாணம்.
விலை ரூபா. ஒன்று
ஆசீர்வாதம் புத்தகசாலை
கண்டி வீதி, யாழ்ப்பாணம்

இன்றைய நிலைமையில் திரைப்படம் நாடகம் போன்ற கலைகளே பொது மக்களிடையே அதிக செல்வாக்குப் பெற்று நிற்கின்றன. சமயக் கருத்துக்கள் நெறிகளை மெல்ல மெல்ல மறந்து போய்க்கொண்டிருக்கும் மக்களிடையே சமய உணர்ச்சியைத் தட்டி எழுப்பவும், ஆத்மீக நெறியில திருப்பி விடுவதற்கும், செல்வாக்கு மிக்கு நிற்கும் நாடகக் கலையைப் பயன்படுத்த முயல்வது விவேகமான செயலாகும்.

இந்நாடகநூல் மாணிக்க வாசகரின் அற்புதங்கள் நிறைந்த உலக வாழ்க்கையை விளக்கி எழுந்தது. இந்த நாடகாசிரியர் பெற்றுள்ள மேடை அனுபவமும் இந்நாடகத்தின் சிறப்புக்கு பலவிடங்களில் புதுமையுருவில்மெருகூட்டியுளளது. பதினெரு காட்சிகளிலுமே உரையாடலில் வேகமும் உணர்ச்சிகளும், கருத்துச் செட்டும் தெளிவும் இருந்தபோதிலும், பத்தாம் காட்சியில், காட்சி விளக்கமும் உரையாடலும் மிகச் சிறப்பாக அமைந்திருக்கின்றன.

—0—

## மாயாவாத துச்சகோளரி

1-ம் பககத் தொடர்ச்சி

டிய மாயாவாத சண்டமாருகம்'.

இச் சண்டமாருதத்தில் அகப்பட்டபரிபக்குவனுக்கு மேலே ஒழுக்க சாதகம் வகுக்கப்படுகின்றது.

தஞ்சமாகுந் தரும
நன்று லேன
நெஞ்சகத்து நினைந்து
புரிவதும்
விஞ்சுகின்ற வியன்பவந்
தீதென
அஞ்சுகின்றதுமாம்
அறிவின்மையே.

யாது யாது வந்தெய்திய
தன்னைத்
தீது நன்றெனச் செய்து
கோள்ள தவை
ஆதிமாயை யென்ருய்ந்தவை
யாற்றுதல்
நீதியான நெறிமைய
தாகுமே,

தருமஞ் செய்க தவறுள
பாவமாங்
கருமஞ் செய்யற்க வேன்பர்
கருத்திலார்;
இருமை தன்னையும்
யாவர் செய்தாலுமேல்
வருவதொன்றிலை;
மாயம் வித்தாகுமோ.
கோலையோடு களவு காமங்
குறித்திடு வஞ்சமெல்லாம்
நிலையெனப் புரிக; யற்ரு
னினக்குமேல் வருந்தீ
தோன்று
மிலை; யவை செய்திடாயே
லிறைவநீ விரும்பிற்
றெல்லாம்
உலகிடை யோருங்கு நண்ண;
உனக்கேவர் வெருகுநீரார்.

இவ்வொழுக்க சாதகம்,

'உலகாயதனெனும் ஒண்டிறற்பாம்பின், கலாபேதத் தகடுவிடம்' உலகாயத விஷம் ஆலகால விஷத்திலும் கொடியது. ஆலகால விஷம் தன் வடிவத்தைப் பலவேறுவகையாக மாற்றிக் கொள்வதில்லை. அதற்குத் தப்பினுந் தப்பலாம். உலகாயத விஷம் காலத்திற்கேற்ற கோலம்பூண்டு கலாபேதங்களாகிய கலை வடிவங்களில் வரும். இலக்கியக்கலை, இசை நாடகக் கலை, மறுமலர்ச்சிக்கலை, முற்போக்குக் கலை, பிற்போக்குக்கலை என்றிங்ஙனம் பெயரிட்டுக்கொண்டு அது பலவேறு ரூபங்களில் தோன்றும். எதற்குத் தப்பினும் அதற்குத் தப்புவது அரிது! அரிது!! ஏகான்மவாத மாயாவாதம் பரம பிதா. அதன் பஃறலைச் சந்ததி உலகாயதம்.

—தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையால் மதங்காக்க ஊக்கியவர்!

"சமணர்கள் அரசியல் அதிகாரம்கொண்டு மறு சமயத்தவர்களைத் துன்புறுத்தி, சமய காரியங்களை ஒடுக்க முற்பட்ட சமயம் திருநாவுக்கரசர் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற சுலோகத்தைக்கொண்டு சமயம் வேறு, வாழ்க்கை வேறு என்று வாழ எத்தனித்த மக்களிடையே, சமயத்தையும் வாழ்க்கையையும் பிணைத்து வாழும் முறையைக்காட்டிச் சைவசமய மறுமலர்ச்சி செய்தார்" என்று போராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. கே. கைலாசபதி அவர்கள் கண்டி சைவ மகாசபையினர் 20-4-63 சனிக்கிழமை மாலை சபை மண்டபத்தில் கொண்டாடிய திருநாவுக்கரசர் விழாவின் போது குறிப்பிட்டார்.

மேலும் அவர் நிகழ்த்திய உரையில் "பண உதவியோ, அரசாங்க உதவியோ இல்லாது, சமணர்களால் இன்னல் உற்ற காலை மக்கள் ஒவ்வொருவரும் தாமாகவே தொண்டு செய்து சமயத்தை வளர்க்க முடியும் என்று மக்களுக்கு உத்வேகம் ஊட்டினுர்" எனவும் கூறினுர்,

சுவாமி சச்சிதானந்தா அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில் "திருநாவுக்கரசரை வழிகாட்டியாகக் கொண்டு சமயத்தொண்டுகளை எல்லோருக்கும் பயன்படும் மக்கள் சேவையாகக் கருத வேண்டும்" என்று குறிப்பிட்டார்,

விழாவில் ஆராதனைகளும் பக்திப்பாடல்களும் சிறப்பான இடம்பெறறன. மேற்படி விழா கொழும்பு வீதி வடக்கு, திருகோணமலை வீதி வடக்கு சைவ வர்த்தகர்களின் உபயமாக நடைபெற்றது.

---

இவ்வாரம் 28-4-63 — 4-5-63

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உடல்நிலை ஊறுபடும். நண்பர்கள் இனத்தவருடன் சச்சரவுகளும் தவறுன விளக்கங்களும் ஏற்படலாம் நிதிநிலையும் திருப்தியாயிருக்காது

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

பணமளவில் நல்ல வாரம், ஆனல் உடல்நிலை அவ்வளவு திருப்தியாயிருக்காது. இனத்தவர் இன்னல் செய்வர். தூற்றித் திரிவோர்பற்றி எச்சரிக்கை.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1ம் 3ம் பாதம்.

உடல்நிலை அவ்வளவு திருப்தியாயிருக்காது உடம்பில் அதிக சூடும் வாய்வுக்கோளாறுகளும் உண்டாகலாம். குடும்ப நிலைமையும் அமைதியாயிருக்காது பணமளவில் நல்லவாரம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

பண இலாபங்கள் நிச்சயம். ஆனல் செலவுகளும் கூடுதலாக இருக்கும். குடும்ப நிலைமைகள் திருந்தவேண்டும். வேலை வழமையிலும் கூடுதலாக இருக்கும், நண்பர்கள் இடரிலிருந்து மீட்பர்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

நீர் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும் போதியளவு ஈடுசெய்யப்பெறுவீர். வரவேற்பதற்கில்லாத சில மாற்றங்களுக்கு இடமுண்டு. உடல்நிலை திருப்தியாயிருக்காது.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். புது முயற்சிகளில் வெற்றியும் உண்டாம். ஆனல் மன நிம்மதி இருக்காது. சிறு உடல் நிலைக் கோளாறுகள் ஏற்படும்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

செலவுகளைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுவீர், உடல்நிலை திருப்தியாயிருக்காது, குடும்ப விவகாரங்களும் குழம்பலாக இருக்கும். சண்டைகளைக் கட்டிக் கொள்வதில் முந்திநிற்பீர்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

பணமளவில் நல்ல வாரம். ஞாயிறும் செவ்வாய் காலையும் எச்சரிக்கையோடு கழிய வேண்டும். மிகுதி நாட்கள் சாதகமானவை. எதிரிகளுக்கு இடையூறு நிச்சயம்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

முற்பாதி வாரம் அவ்வளவு சாதகமானதாயிருகாது. திங்கள் மாலை செவ்வாய் புதனை எச்சரிக்கையோடு கழிக்குக. வேலை வழமையிலும் அதிகமாக இருக்கும். இக்கட்டிலிருந்து நண்பர் மீட்பர்

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

குடும்பத்தகராறு தொடரும் இரகசிய எதிரிகள் மூலமான தொல்லைகளுக்கும் இடமுண்டு மன அமைதி இருக்காது வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு. வியாழன், வெள்ளி, சனி காலை எச்சரிக்கையோடு கழிய வேண்டும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

திரும்பவும் நல்ல வாரம். தொழில் வெற்றி நிச்சயம், எதிரிகளுக்கு இன்னலும் குடும்ப அமைதியும் நிச்சயம், கடைசி நாளை எச்சரிக்கையோடு கழிக்குக.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

உமது உழைப்புக்குத்தக நீர் ஈடு செய்யப்படமாட்டீர். பணக் கஷ்டங்கள் உண்டாம். ஆனல் நண்பர் உதவி வரும். குடும்ப அமைதி நிலவும்.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

நல்லூர்
சண்முகம் விஜயரத்தினம்
— வழக்காளி
வழக்கு இல M B. 4487
எதிராக
சிவியாதெரு
1 இளையதம்பி செல்வத்துரை
2 செல்வததுரை பெண் சிவக்கொழுந்து
3 காத்திகேசு கோபாலசிங்கம் அல்லது இரத்தினம்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4487 ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும் ஒரு துண்டுக காணி 1963-ம் ஆண்டு வைகாசி மாதம் 25-ந் உ சனிககிழமை (25-5-63) காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலததில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-ரூபா 9185ம் 28-12-61 தொடக்கம் [illegible] வரைக்கும் ரூபா 700[illegible] வட்டியும், அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்ருக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும கோட்டுச்செலவு ரூபா 172-88 சதமும். இதில் ரூபா 172-88 சதமும், இதில் ரூபா 165 எதிரிகளால் கட்டப்பட்டுள்ளது.

காணியின் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி சுண்டிக்குளி கோயிற்பற்று, சிவியாதெரு இறை, பட்டங்கட்டி வளவும் பத்தினி வளவும் புளியடி வளவும் பங்குகளும்" (Paddankaddivalawu & Paththiny Valawu & Pulyady valawu & Parcels) நிலப்பரப்பு8 குளி 10 68/7ம் வீடும், போட்டிககோவும், பயிர்களும், வடககுக் காணியிலுள்ள கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் உரிமையும் எலலை கிழக்கு ரோட்டும் கந்தையா சரவணமுத்துவின் காணியும். வடக்கு இளையதம்பி இராசையாவின் காணி, மேற்கு சின்னத்தம்பி இராசையாவின் காணி தெற்கு கந்தையா சரவணமுததுவின் காணி D 239/286-ல் பதயப்பட்டது.

சே. பாண்டித்துரை,
ஏலதாரர், தரகர்.
Commissioner of Sales,
Valuer Auctioneer & Broker
[illegible]
M 17 26-4-63

---

### 50 ஆயிரம் செலவில் தே

நல்லூர் கைலாசநாதப் பிள்ளையார் கோயிலுக்கென ரூபா 50 ஆயிரம் செலவில் செய்து முடிக்கப் பெற்றுள்ள புதிய தோ நாளை சனிக்கிழமை அதே கோயிலில் வெள்ளோட்ட விழாக் காண இருக்கிறது

### நயினை நாகபூஷணி அம்மை பிரதிட்டா யந்திர பூசை

நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் எதிர்வரும் வைகாசி மாதம் 20-ம் திகதி (3-6-63) திங்கட்கிழமைநடைபெறும் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இம்மாதம் 7-ம் திகதி (?0-4-63) சனிக்கிழமை இரவு முதல் யந்திர பூசை நடைபெறுகின்றது.ஷை பூசை பகல் 10-30 மணி முதல் 1 மணிவரையும் இரவு 7 மணி முதல் 8 30 மணிவரையும் நடைபெறும்.

### மகா கும்பாபிஷேகம்

உரும்பராய் பர்வதபத்தினி அம்பாள் புனராவர்த்தன சம்ரோட்சண மகா கும்பாபிசேகம் எதிர் வரும் திங்கட்கிழமை (29-4-63) அதிகாலை 7 மணிககு வேதாகமவிதிப்படி நடைபெறும். ஷை கும்பாபிசேக கிரியாரம்பம் சென்ற வியாழக்கிழமை தொடங்கி நடைபெற்று வருகின்றது

மேற்படி தினத்தன்று பர்வத பத்தினி அம்பாள், விக்னேஸ்வர மூர்த்தி. சிவகாமசுந்தரி சமேத சிதம்பர நடராஜமூர்த்தி பிரதிஷ்டை செய்து வைக்கப்படும் மேற்படி ஆலயத் திருப்பணிகள் நிறைவேற ரூபா இருபத்தையாயிரத்திற்கு மேலே செலவாயிற்று என்பது குறிப்பிடத் தக்கது

### அடைவு நகை ஏல விற்பனவு

—()—

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கில் அடைவு பிடிக்கும் தம்பிப்பிள்ளை பொன்னையா பிள்ளை அவர்களிடம் 5-9-60 தொடக்கம் 31-2-62 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 17-5-63 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசிதத ஏலத்தில் விற்கப்படும்

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்,
643. காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.
M 20 26, 3-5-63.

---

### பிஸ்கால் கொமிசன் விற்பனை

—0—

இலக்கம் 7082
பருத்தித்துறை
டிஸ்திறிக் கோட்டில்

வல்வெட்டித்துறை அருளம்பலம் செங்கல்வராசா
— வழக்காளி
எதிராக

வல்வெட்டிததுறை (1) செல்லவினுயகம் கைம்பெண் அம்மன்னை, (2) ராயப்பு பாக்கியநாதர், (3) பெண் எமிலி எலிசபெத், (4) அளகசுந்தரம் கைம்பெண் ஆச்சிமுத்து, (5) பொன்னுச்சாமி சிவகுரு, (6) பொன்னுச்சாமி வேலும்மயிலும்
— எதிராளிகள்

மேற்சொல்லிய இலக்க வழக்கில் கோட்டால் எமககனுப்பிய கட்டளையின்படி இதன்கீழ்சொல்லப்படும் ஆதனங்களில் மேற்சொல்லிய வழக்காளிக்கும் 4-ம் 5-ம் 6-ம் எதிராளிகளுக்கும் உள்ள நயம், உரித்து பிரயோசனங்களையும் 1963-ம் ஆண்டு ஆனி மாதம் 3 ந் திகதி திங்கட்கிழமை காலை 10 மணி துவங்கி ஆதனத்தடியில் பிரசிதத ஏலத்தில் விற்கப்படும் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அதாவது:-

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி, உடுப்பிட்டி கோயிற்பற்று வல்வெட்டித்துறை இறை "முடவப்பன் கன்றடி" விசாலம் நில. பரப்பு 2 குளி 11, 20/32 இது கோட்டில் வழக்கில் அணைக்கப்பட்டிருக்கும் உலாந்தா மேஸ்தர் பி. ஜயாத்துரையால் 19-10-62-ல் 47 ஏ இலக்க அளவைப் பிளானில் 1-ம் 2-ம் 3-ம் துண்டுகளாய் காட்டப்பட்டு இருக்கிறது இதில் காலை பத்து மணிககு விற்கப்படும்.

(1) 2-ம் இலக்கத்துண்டு விசாலம் குளி 5. 30/32-ம், அதற்குரியவைகளும, எல்லை கிழகது செல்லசாமிபெண் சானகியம்மா, வடக்கு மேற்சொல்லப்பட்ட படத்தில 1-ம் இலககத்துண்டு, மேற்கு ஒழுங்கை. தெற்கு மேற்சொலலபபட்ட படத்தில் 3-ம் இலககததுண்டு.

இந்த ஆதனத்தின் பெறுமதி ரூபா 331-64 சதம்.

காலை 11 மணிககு விற்கப்படும்

(2) 3-ம் இலக்கததுண்டு விசாலம் குளி 5, 30/32 ம், அதற்குரியவைகளும், எல்லைகிழக்கு செல்லசாமி பெண் சானகியம்மா, வடக்கு மேற்சொலலப்பட்ட படததில் 2-ம் இலக்கத்துண்டு, மேற்கு ஒழுங்கை. தெற்கு கணபதி கிட்டினனுக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம்.

இந்த ஆதனத்தின் பெறுமதி ரூபா 364-84 சதம்.

கவனிப்புகள்.

(அ) ஆதனங்கள் முதலில் பங்காளருககுள் பெறுமதிக்குககுறையாமல் விற்கப்படும். பங்காளிகள் கொள்வனவுகாரராக வரத தவறினுல் ஆதனம் திரும்ப பிரசிதத ஏலத்தில் ஆகககூடிய கேள்விககாரருக்கு விற்கப்படும். இதிலே மற்றவர்களோடு பங்காளரும் கேட்டு வாங்கலாம்.

(ஆ) கொள்விலைப் பணம் ரூபா 100 க்கு மேற்படாவிட்டால் முழுவதும் பிஸ்கால் சலாரும் உடனே கட்டவேண்டும். கொள்விலை ரூபா 100 கக்கு மேற்பட்டால் பங்காளரைததவிர மற்றவர்கள் கொள்விலையில் நாலில் ஒரு பங்கும் பிஸ்கால் சலார் முழுவதும் உடனே கட்டி மிகுதிப்பணததை 30 நாட்களுக்குள் இறுக்கப் போதுமானதும் நல்லதுமான இரண்டு பிணககாரருடன் உடனே ஒப்பந்தம் எழுத வேண்டும்.

(இ) பிஸ்கால் சலாரின் விபரமானது:— பிரசித்த விளம்பரச் செலவு கொமிசன், கொள்விலைப் பணத்தில் 100-க்கு 2 வீதமும் பயணச்செலவு முதலியன.

த. குருநாதபிள்ளை
வடமாகாண பிஸ்காலுககாக பிஸ்கால் கந்தோர்,
யாழ்ப்பாணம், 25-4-63.
M 19 3-5-63.

---

### திருநாவுக்கரசர் விழா

சிதம்பரம் சித். 8

தருமபுரம் ஆதீனம் 25 வது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், ஞான பீடமேறிய 18-வது ஆண்டு நிறைவு விழாவும், திருநாவுக்கரசரின் குருபூசை விழாவும் நேற்று சிறப்புடன் நடைபெற்றது.

---

### தேவார ஆராய்ச்சிக் கல்லூரி

திருநாவுக்கரசுநாயனுர் ஐக்கியமடைந்த தலமாகிய திருப்புகலூர் ஸ்ரீ அக்னீசுவரசுவாமி தேவத்தானத்தில், திருநாவுக்கரசுநாயனுரின் ஐக்கிய மகோற்சவம் 10 நாட்களுக்கு நடைபெற்றது அண்ணுமலைப் பல்கலைக்கழகம் மூன்னுள் துணைவேந்தர் ஸ்ரீ டி. எம். நாராயணசாமிப்பிள்ளை தலைமையில் 7-வது திருமுறை மகாநாடும், தேவாரப்பண் ஆராய்ச்சியும் ஆரம்பமாகியது. மகாநாட்டுத்தலைவர் ஸ்ரீ டி எம் நாராயணசாமிபிள்ளை பேசுகையில் "சென்னை அண்ணுமலை மன்றத்தில் பண் ஆராய்ச்சி நடைபெற்று வருவதுபோல் இந்த தேவஸ்தானத்திலும் திருமுறை வாணர்கள் நிறையக் கூடி பண் ஆராய்ச்சி செய்வதைப் பார்த்துப் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன், இம்மாதிரித் திருமுறை மகாநாடு நாடெங்கிலும் நடைபெறவேண்டியது மிகமிக அவசியம்" என்றும் கூறினுர்.

இரண்டாவது நாள் மகாநாட்டில் திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவான் ஸ்ரீ ச. தண்டபாணிதேசிகர் பேசுகையில் வேளாக்குறிச்சி ஆதினம் 400 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது என்றும் அக்காலத்தில் ஆட்சி செய்து வந்த கிழக்கிந்திய கம்பெனியார் இந்த ஆலயத்தையும் மேற்கொண்டு இரண்டு ஆலயத்தையும் ஆதீனத்தினிடம் ஒப்படைத்தனர் என்றும், இதற்கிடையில் ஏறக்குறைய 30 ஆண்டுகள் ஆதீனத்துக்கும் கோவில்களுக்கும் தொடர்பு இல்லாதிருந்து இப்பொழுதுதான் ஆதீனத்திற்கும் கோவில்களுக்கும் தொடர்பு ஏற்பட்டு, திருநாவுக்கரசரின் ஐக்கிய விழா முதலாவதாக நடைபெறுகின்றது என்றும் கூறினுர்.

மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ இராமநாதனு செட்டியார் தலைமையுரையில் வேதங்களின் சாரமான திருமுறைகளின் வளர்ச்சிக்கு இந்த ஆலயத்தில் தேவாரப்பதிக ஆராய்ச்சிக்காக ஓர் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும் என்றும்கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீலஸ்ரீ. மகாசன்னிதானம் அவர்கள் பேசுகையில் திருமுறைவாணர்கள் மக்களிடத்தில் தெய்வபக்தி ஏற்படுவதறகு தேவாரம், திருவாசகங்களைக் சுதாகால க்ஷேபங்களாகச் செய்வதற்கு முன்வர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

திரு மா, பா. "தினமணி"நிருபர்.

---

### மகா கும்பாபிஷேகம்

வேலணை மேற்கு, பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் கோவிலில் சந்தான கோபாலருக்கெனப் புதிதாக அமைக்கப்பெற்ற திருக்கோவிலில் இன்று (26-4-63) 6 மணியளவில் சந்தான கோபாலருககுசுவாமி அனுஞ்ஞை முதல் ஓமலுண்டததுடன் கூடிய கிரியா முறைகளமைந்த வேதாகமகோஷ சங்கமங்கல வாத்தியங்களுடன் மகா கும்பாபிசேகம் திருவருள் வசத்தால் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

இல. M. B. 4439.

மயிலிட்டி 1. S. சண்முகலிங்கம் மனைவி
2. புவனேஸ்வரி

—வழக்காளி.

எதிராக:

1. Mariyampillai Mathias for himself and as legal representative of the estate of the late Usteenammah daughter of Mariampillai and wife

2. ஞானம்மா இருவரும் மயிலிட்டி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 4439 இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணியும் 1963-ம் ஆண்டு ஆடிமாதம் 6-ம் திகதி சனிக்கிழமை (6-7-63) முற்பகல் 9 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:

ரூபா: 1987—50க்கும் இன்னும் 1590—க்கும் 8-12-1961 தொடக்கம் 21-11-1962 வரைக்கும் 10% வட்டியும் அதன்பின் கூடிய முழுத்தொகைக்கும் 5% வட்டியும் கொடுக்கும்வரையும் இறுக்கவேண்டும், ஏற்பட்ட செலவு 206 ரூபா 26 சதம். வெளியாததுச் செலவு 46 ரூபா 65 சதம்; வரும் செலவு 23 ரூபா 50 சதம்.

காணி விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் மயிலிட்டி கோயிற்பற்று. பெரிய நாட்டு தேவன்துறை இறை "மண்குன்று" என்னும் காணி விலப்பரப்பு 1. இதில் தென்னை மரங்கள் உண்டு எல்லை கிழக்கும், தெற்கும் ஒழுங்கை வடக்கு பேதுருப்பிள்ளை மனைவி பாக்கியம், மேற்கு சின்னத்துரை மனைவி ரோசாவும் மற்றவர்களும் இது முழுவதிலும் பிரிக்கப்படாத 2/3 பங்கு.

2. மேற்படி கூறிய கோயிற்பற்று மூலவை இறை "தியக்கை" என்னும் காணி வில. பரப்பு 11, இதில் பனைமரங்கள் உண்டு எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை கைம்பெண் சின்னுச்சியும் மற்றவர்களுக்கும், வடக்கு கணபதிப்பிள்ளை சின்னையா, மேற்கு றேட்டு, தெற்கு அமெரிக்கன்மிசனுக்கு (American Missian) உரிய காணியும் உண்டு. இதில் பிரிக்கப்படாத 21/300 பங்கு.

இ. கனகரெத்தினம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

நம்: 35 கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

M. 16 26-4-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சங்கானை மேற்கு
அருணாசலம் நடராசா

வழக்காளி.

இல M. B. 4420

எதிராக

சங்கானை கிழக்கு 1 கார்த்திகேசு மாரிமுத்து தானுகவும் தனது பெண் காலஞ்சென்ற ஆச்சிக்குட்டியின் ஆஸ்த்திக்கு பிரதிகாரியஸ்தராகவும்.

சங்கானை 2, குழந்தைவேலு இராசையா காலஞ்சென்ற கார்த்திகேசு குழந்தைவேலுவின் ஆஸ்திக்குப் பிரதிகாரியஸ்தராகவும்.

சங்கானை கிழக்கு 3. கார்த்திகேசு கணபதிப்பிள்ளை

4. கார்த்திகேசர் நடேசன்

– எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 4420 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1963 ம் ஆண்டு மே (வைகாசி) மாதம் 25 ம் திகதி (25-5-63 சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:–முதல்வட்டி ரூபா 4500-ம் இதில்ரூபா 2800க்கு 30-11-61 திகதி தொடக்கம் 30-7-62 திகதிவரைக்கும் 100 க்கு 9 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் இறுபடும் வரைக்குப் 100 க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 238–30 சதம்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானைக் கோவிற்பற்று சங்கானை கிழக்கிறை "ஓடைவயல்" நெற்பரப்பு எட்டு (8ம்) இக்காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் வடக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் எல்லை கிழக்கும் தெற்கும் சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவிலுக்குரியஆதனம், வடக்கு அப்பாச்சிப்பிள்ளை வன்னித்தம்பியின் ஆதனம், மேற்கு தம்பு சுப்பிரமணியத்தின் ஆதனம், இதடங்கலும்.

2. மேற்படி சங்கானை கிழக்கிறை "அலகிடை" நெற் பரப்பு 18¾ ம் எல்லை கிழக்கு பண்டாரி வயிரமுத்துவுக்கும் விஞயர் முருகேசுவுக்கும் விஞயர் சின்னத்தம்பிக்குமுரிய ஆதனங்கள். வடக்கு முருகர் கணபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் மேற்கு பண்டாரி வயிரமுத்துவின் ஆதனம். தெற்கு பண்டாரி சிவரத்தினத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், இதடங்கலும்,

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணார்பண்ணை கிழக்கு, முருகேசு கைம்பெண் நாகரத்தினம்

—வழக்காளி.

இல. M.B, 4197.

எதிராக

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிவீதி சண்முகம் ஸ்ரோஸ் (Stores) செல்லப்பா சற்குருநாதன் தனது பெற்றோர் வேலணை மேற்கு தளைய சிங்கம் செல்லப்பாவினது பெண் சிவபூரணத்தினதும் ஆஸ்திக்கு சட்டபூர்வமான பிரதிநிதி

—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 4197–ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை, 1963-ம் ஆண்டு வைகாசிமீ 25-ம் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபாய் 1873 ம், 16-8-61 தொடக்கம் 14–3-62 வரைக்கும் ரூபாய் 1000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 293/77–ம், (செலவழித்த தொகை ரூபா 175/70; வெளியாத்துச் செலவு ரூபா 35/57; ஏற்படக்கூடிய செலவு ரூபா 28/50)

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக தீவுப்பகுதி, வேலணை கோவிற்பற்று, வேலணை கிழக்கிறை, "நாகன்தோட்டம்" விலபர. 22, இதில் மேற்குப்பக்கமாக வில. பர. 14½யும் வீடும் கிணறும், பனைகள் தென்னைகள் மற்றும் இதற்குச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லை கிழக்கு கதிர்காமு கந்தசாமிக்கும பெண் தங்கம்மாவுக்கும் உரிய இதன் மிகுதிக்காணி; வடக்கு கதிர்கா

3 மேற்படி சங்கானை கிழக்கிறை "சிற்றுந்தல்" நெற்பரப்பு (12ம்) வடகரையிருக்கும் கிணற்றில் அரைவாசியும் எல்லை கிழக்கு முருகர் நாகநாதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் வடக்கு பண்டாரி வயிரமுத்துவுக்கும் பெண் நாகமுத்துவுக்குமுரிய ஆதனம் மேற்கும் தெற்கும் ஒழுங்கை. இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 1-4-1963.
M, 15, 26-4-63.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

மாவிட்டபுரம்
1. சித்தர் சபாபதி
2. பெண் பொன்னு

வழக்காளிகள்,

இல. M. B. 3466.

எதிராக:

மாவிட்டபுரம்
1. கணபதி சிதம்பரன்
2. பெண் செல்வி

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B. 3466-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1963-ம் ஆண்டு மே (வைகாசி) மாதம் 11-ம் திகதி (11-5-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:–முதல்வட்டி ரூபாய் 550-ம், இதில் ரூபாய் 400-க்கு 27-6-60 திகதி தொடக்கம் 13–12-60 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 134–05 சதம்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று மாவிட்டபுரயிறை "பயின் கிராணை" கலப்பரப்பு மூன்று (3-ம்) செய்பயிர் வானபயிர்களும் எல்லை கிழக்கு கந்தர் சின்னப்பாவின் உருமைக்காறருக்குரிய ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு சின்னப்பு காசிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு இராசகாரியகம் குமாரகுலசிங்கத்தின் உருமைக்காறருக்கும் சரவணை நல்லானுக்குமுரிய ஆதனம் இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer &
Licensed Auctioneer.
தெல்லிப்பழை, 18–2–1963,
M 11. 26-4-63.

## திருநாவுக்கரசர் விழா

(20-4-63) சனிக்கிழமை)

திருநாவுக்கரசர் குருபூசை தினத்தன்று இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தினரால் நாவுக்கரசர் பாடிய தேவாரங்களில் எழுத்துப் பரீட்சையும், பண்ணிசைப் போட்டியும் நடைபெற்றன.

மாலை 7 மணியளவில் மஞ்சத்தடி சிவசுப்பிரமணிய கோயிலில் கழகத்தலைவர் திருவாளர் க. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் விழா ஆரம்பமானது, நாவுக்கரசர் பெருமையினைப்பற்றி திருவாளர் க. கனகசுந்தரம் அவர்கள் சிறு சொற்பொழிவாற்றினுர்கள். பரிசுபெற்றோர் களுக்கு கழகத்தலைவர் பரிசில்கள் வழங்கினுர். ஈற்றில் கழகச் செயலாளர் திரு. செ கனகசபாபதியினுல் நன்றியுரை கூறப்பட்டது.

மன் கைம்பெண் பொன்னிக்கு உரிய ஆதனங்களும், ஒழுங்கை முகப்பும கப்பன் கயிலயனுக்கும வைரமுத்து கந்தையாவுக்கும் நாகமுத்தன் ஐயனுக்கும் உரிய ஆதனங்களும்; மேற்கு நாகலிங்கம பொன்னையாவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம்; தெற்கு அம்பலவாணர் கந்தையாவுக்கும் பங்காளருக்கும் மூத்த தம்பி சோமசுந்தரத்துக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனங்கள்.

அ. வெற்றிவேலு
[illegible]
யாழ்ப்பாணம், 3-4-63.
M, 18 23-4-63.

# உண்மை விளக்கம்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

ப—ரை; துடி அதனில் தோற்றம் - இறைவன் டமருகம் ஏந்திய திருக்கரத்திலே படைத்தலாகவும், அமைப்பில் தோயும் திதி - அபயகரத்திலே ஆனமா பொருந்துகின்ற காத்தலாகவும், சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - சொல்லப்பட்ட அக்கினி ஏந்திய திருக்கரத்திலே (மலம் நீக்கிச் சுகஞ் செய்தலாகிய) அழித்தலாகவும், ஊற்றம் ஆ(க) ஊன்றும் மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் - உறுதி பெற ஊன்றி நின்ற திருவடியிலே பிரபஞ்சத்தை மறைத்தலாகவும், நான்ற மலர்ப்பதத்தே முத்தி. நாடு - தூக்கிய மலர்போலுந் திருவடியிலே முத்தியளித்தலாகிய அனுக்கிரகமாகவும் திருநடனஞ் செய்வானென்பதை நீ விசாரித்து அறிவாயாக.

பொழிப்பு: இறைவன் டமருகமேந்திய திருக்கரத்திலே படைத்தலாகவும், அபயகரத்திலே காத்தலாகவும், அக்கினியேந்திய திருக்கரத்திலே அழித்தலாகவும், ஊன்றிய திருவடியிலே மறைத்தலாகவும், தூக்கிய திருவடியிலே முத்தி அனுக்கிரகமாகவும் பஞ்சகிருத்திய நடனஞ் செய்வான். இவ்வுண்மையை நீ ஆராய்ந்தறிவாயாக.

### மும்மலம் நீக்கி முத்தியளிக்குந் திருநடனம்

மாயை தனையுதறி வல்வினையைச் சுடமேலஞ்
சாய அழுக்கியருள் தானெடுத்து — நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பாதந் தான் 36

கொ - கூ: எந்தையார் பாதம் (செய்யும் திருநடன முறைமை, தான் மாயைதனை உதறி, வல்வினையைச்சுட்டு, மலம் சாய அமுக்கி, அருள்தான் எடுத்து, நேயத்தால் ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல் தான்.

ப-ரை: எந்தையார் பாதம் தான் - எமது தந்தையாகிய பரமேசுவரனது திருநடன முறைமையாவது மாயை தனை உதறி - டமருகம் ஏந்திய திருக்கரத்தினுலே மாயையை நீக்கி, வல்வினையைச் சுட்டு - அக்கினி ஏந்திய திருக்கரத்தினுலே கன்மத்தை அழித்து, மலம் சாய அமுக்கி - ஊன்றிய திருவடியினுலே ஆணவமலம் மேலிடாமல் அழுத்தி, அருள் தான எடுத்து - தூக்கிய திருவடியினுலே திருவருளை உடம்பாக நிறுத்தி, நேயத்தால் ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல் தான் - பெருங் கருணை கொண்டு அஞ்சலென அமைத்த திருக்கரத்தினுலே பேரானந்த சாகரத்தில் ஆன்மாவை மூழ்குவித்தலேயாம்.

பொழிப்பு: பரமேசுவரனது திருநடன முறைமையாவது:- மாயையை நீக்கி, கன்மத்தை அழித்து, ஆணவமலம் மேலிடாமல் அழுத்தி, திருவருளை உடம்பாக நிறுத்தி, தமது பெருங்கருணையினுலே ஆன்மாவைப் பேரானந்தத்தில் மூழ்குவித்தலாம்.

—தொடரும்.


யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சவிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450–ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாசயந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 26 4-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம. சிவபிரகாசம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org